முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1054

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.08.2022, வியாழக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா வாழ்க
ஞானிகள் பலம்கொண்ட தேசிகா வாழ்க
தானதர்ம சக்தியோடு தரணியையே
தக்கபடி ஞானலோகமாக்க அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே உந்தனுக்கு
ஆற்றல்பட சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 02 நாள், 18.08.2022 வியாழக்கிழமை)
ஆக்கமுடன் அரங்கனுள் என் சக்தி
அளவில்லா தேற்றமாக இருந்துவர
3. வருமுலகில் கலியுக மக்களெல்லாம்
வணங்கி அரங்கன் திருவடி பற்றி
அழியாமை தருகின்ற உயர் ஞானத்தை
ஆசி தீட்சையாக பெற்று தொடர்ந்து வர
4. வருகவே மக்களுக்கு ஞானபலமும்
வடிவேலன் என் தயவும் அருள் பலமும
தருகின்ற அரங்கன் கரம் வழியே
தரணியோர்க்கு சக்தியாக மாறக்கூடும்
5. கூடவே இந்தவித அற்புதத்தை
குரு அரங்கனுக்கு ஆறுமுகன் யான்
ஈடேற்றம் நித்தம் நித்தம் செய்து
இணையில்லா சக்தி வழங்கி வர
6. வருகின்ற அரங்கன் ஞானவழி
வையகத்தை காக்கும் உயர்வழி
தருகின்ற அரங்கன் அருளமுது
தரணியோர் பிணி நீக்கும் அருமருந்து
7. மருந்தெனும் அரங்கன் அற்புத வழி
மக்களை எல்லாம் மீட்டு ஞானவான்கள் ஆக்கி
பேருலகை ஞான லோக வழிக்கு
பிசகில்லா மாற்றம் செய்யும் மார்க்கமாகும்
8. ஆகவே உலகோர் ஒன்றிணைந்து
அரங்கன் திருவடி பற்றி வர
ஜெகமே ஞான யுகமாற்றம்
செப்பிடுவேன் ஞான ஆட்சிக்கால சூழலாகவும் மாறி

9. மாறியே அற்புதம் நிகழும்
மண்ணுலகம் பேராற்றல் காணும்
ஆறுதலாய் அரங்கன் தொண்டர் வழி
அனைத்தும் அற்புதமாய் கனியக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–